RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 149 ஜூன்.6 2026 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# தமிழக அமைச்சரவை கூட்டத்தில் 436 திட்டங்கள் குறித்து ஆலோசனை: அமைச்சர் நிர்மல்குமார் தகவல்

சென்னை: ஜூன்.6-

“தேர்தல் வாக்குறுதிகளோடு சேர்த்து 436 தொலைநோக்கு திட்டங்கள் குறித்து தமிழக அமைச்சரவையின் முதல் கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டது,” என அமைச்சர் சிடிஆர் நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

முதல்வர் விஜய் தலைமையில் தமிழக அமைச்சரவையின் முதல் கூட்டம், தலைமைச் செயலகத்தில் ‘வெற்றித் தமிழகம்’ என்ற பெயரில் இன்று நடைபெற்றது. இதையடுத்து, அமைச்சர் சிடிஆர் நிர்மல்குமார் செய்தியாளர்களிடம் சந்தித்தார். அப்போது அவர், “ஒவ்வொரு துறைக்கும் தொலைநோக்கு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதை அந்தந்த துறை அமைச்சர்கள், அதிகாரிகளோடு இணைந்து கலந்தாலோசித்து முடிவெடுப்பார்கள். முதல்வர் விஜய் இது குறித்து அறிவுறுத்தினார்.

அதில் இளைஞர்கள் மேம்பாடு, முன்னேற்றம், மகளிர் மேம்பாடு, விவசாயிகள் மற்றும் மீனவர்கள் வளர்ச்சி, லஞ்சம் இல்லாத நல்லாட்சி, போதை இல்லாத தமிழகம் என அனைத்துத் துறைகளுக்கும் தொலைநோக்கு திட்டங்களை முதல்வர் வகுத்து கொடுத்துள்ளார்.

தேர்தல் வாக்குறுதியில் கொடுக்கப்பட்டதையும் சேர்த்து, தற்போது 436 திட்டங்கள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. குட்கா, போதைப் பொருட்கள் விற்பனையை முற்றிலும் ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேகேதாட்டு அணை கட்டும் விவகாரத்தில் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும்” இவ்வாறு அவர் கூறினார்.






# தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர் ஜூன் 18ல் தொடக்கம்



சென்னை: ஜூன்.6-

தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர் வரும் ஜூன் 18ம் தேதி ஆளுநர் உரையுடன் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று முதல்வர் விஜய் தலைமையிலான கூட்டணி ஆட்சி நடந்துவரும் நிலையில், இதுவரை 3 முறை அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் இன்று காலை அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிலையில், சட்டப்பேரவை செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், ‘தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கூட்டம், 2026 ஆம் ஆண்டு, ஜூன் 18ம் நாள், வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு, சென்னை தலைமைச் செயலகத்திலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் கூடும். அச்சமயம் தமிழ்நாடு ஆளுநர் உரை நிகழ்த்த உள்ளார்’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் முதல் கூட்டத்தொடர் இதுவாகும். 202627ம் நிதியாண்டுக்கான புதிய அரசின் முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# திருப்பரங்குன்றம் ‘சர்வே’ தூணில் தீபம் ஏற்ற அரசு அனுமதிக்கக் கூடாது: இந்தியக் கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்

சென்னை: ஜூன்.6-

திருப்பரங்குன்றம் விவகாரத்தில், சிக்கந்தர் தர்கா அருகில் உள்ள சர்வே தூணில் தீபம் ஏற்ற அனுமதிக்கக் கூடாது என தவெக அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துக்கிறது.

இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில்: திருப்பரங்குன்றம் தீப விவகாரத்தில் தமிழக அரசு தனது நிலைபாட்டை வரும் ஜூன் 22ம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும் என, மதுரை உயர் நீதிமன்றக் கிளை நேற்று (04.06.2026) உத்தரவிட்டுள்ளது. இது கவலை அளிக்கிறது.

திருப்பரங்குன்றத்தில் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் நடப்பட்ட சர்வே தூணில் தீபம் ஏற்ற அனுமதிக்க வேண்டும் என வலது சாரி அமைப்பை சேர்ந்த சிலர் வற்புறுத்தி மோதல் நிலையை உருவாக்கி வருகின்றனர், நீதிமன்றத்திலும் வழக்குகளை தொடர்ந்துள்ளனர். அந்த சர்வே தூண் நடுவதற்கு முன்பிருந்தே அப்பகுதியில் சிக்கந்தர் தர்கா இருந்து வந்துள்ளது.

அந்த சர்வே தூணில் தீபம் ஏற்றும் நடவடிக்கைகளின் மூலம் அந்த தர்காவை எதிர்காலத்தில் அகற்றிட வேண்டும் என்று அடுத்த கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டு, மத நல்லிணக்கத்தை சீர்க்குலைத்து, மக்களை மத ரீதியாக அணி திரட்டி, பிளவு படுத்தி அரசியல் ஆதாயம் அடைய வேண்டும் என்பதே வலது சாரி சக்திகளின் நோக்கமாகும்.

வலது சாரி சார்புள்ள சில நீதி அரசர்களும் இந்நோக்கத்திற்கு துணை நிற்பது நீதி பரிபலான முறையில் ஏற்பட்டுள்ள பேராபத்தாகும் என்பதை, மதச்சார்பற்ற கொள்கை வழி அரசு கருத்தில் கொள்ள வேண்டும் நீதிமன்றத்தை பயன்படுத்தி, அரசியல் சட்டத்திற்கு முரணான தங்களது தீர்ப்புகள் மற்றும் உத்தரவுகளின் மூலம் சர்வே தூணில் தீபம் ஏற்றலாம் என்ற கருத்தை அடிப்படையிலேயே நிராகரிக்க வேண்டும்.

இத்தகைய முயற்சி நமது அரசியல் சட்டத்திற்கும், மதச்சார்பற்ற விழுமியங்களுக்கும், மத நல்லிணக்கத்திற்கும், மக்களின் ஒற்றுமை ஒருமைப்பாட்டிற்கும் எதிரானதாகும். அது மட்டுமல்ல, 1991 வழிபாட்டு தலங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், 1991 (The Places Of Worship) (Special Provisions) Act, 1991-க்கும் எதிரானதாகும்.

இச்சட்டப்படி, 1947 ஆகஸ்டு 15க்கு முன்னர் வழிப்பாட்டுத் தலங்கள் எவ்வாறு இருந்ததோ அப்படியே தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும். 1947 ஆகஸ்டு 15க்கு முன்னர் வழிப்பாட்டு தலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் அதனை எதிர்த்து வழக்காட முடியாது. இந்த நிலையில் திருப்பரங்குன்றம் பிரச்சினையில், தமிழக அரசு கடந்த காலத்தில் மேற்கொண்ட சரியான நிலையை இப்போதும், வரும் காலத்திலும் உறுதியோடு முன்னெடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி வலியுறுத்துகிறது.

வலது சாரிகள் மற்றும் வலது சாரி சார்புடைய நீதியரசர்களின் அழுத்தத்திற்கு அடி பணியாமல் சட்ட ஒழுங்கையும், மதச்சார் பற்ற கொள்கை நிலையில் நின்று, சமூக நல்லிணக்கத்தையும் பாதுகாக்க வேண்டியது அரசியலமைப்பு சார்ந்த கடமையாகும். இதன் அடிப்படையில் திருப்பரங்குன்றத்தில், சிக்கந்தர் தர்கா அருகில் உள்ள சர்வே தூணில் தீபம் ஏற்ற அனுமதிக்கக் கூடாது என தமிழக அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது” என்று மு.வீரபாண்டியன் கூறியுள்ளார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

# அதிக மக்களை இணைக்கும் ஒரு புதிய அரசியல் இயக்கம்: அண்ணாமலை அறிவிப்பு

புதுடெல்லி: ஜூன்.6-

“அதிக மக்களை இணைக்கும் ஒரு புதிய அரசியல் இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பதே தனது மிகப்பெரிய ஆசை” என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பாஜகவில் இணைந்து அக்கட்சியின் மாநிலத் தலைவராக இருந்த அண்ணாமலை, அக்கட்சியில் இருந்து விலகுவதற்கான ராஜினாமா கடிதத்தை கட்சித் தலைமையிடம் வழங்கி இருந்தார். அவரது ராஜினாமா ஏற்கப்பட்டதாக பாஜக இன்று அறிவித்தது.

இந்நிலையில், தனது எதிர்கால திட்டங்கள் குறித்து சமூக ஊடகங்கள் வாயிலாக அவர் பேசினார். அப்போது அண்ணாமலை கூறியது: “நான் 2020, ஆகஸ்ட் 25ல் பாஜகவில் இணைந்தேன். தமிழக மக்களுக்காக 6 ஆண்டு காலம் பணியாற்றுவதற்கு பெரிய வாய்ப்பு கிடைத்தது. அதை பெரிய பாக்கியமாக கருதுகிறேன்.


என்னுடைய பாதை வேறு; வேறு பாதையில் பயணம் செய்ய வேண்டும்; எனக்கு இலக்குகள் பெரியதாக உள்ளன; நிறைய மக்களை இணைத்து செயல்பட வேண்டும்; ஒரு புதிய அரசியலை, அடிப்படை கட்டமைப்புகளை மாற்றக்கூடிய அரசியலை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நான் இருக்கிறேன் என்பதை பாஜக தலைவர்களிடம் பண்போடு சொல்லிவிட்டு அந்த இயக்கத்தில் இருந்து வெளியே வந்துள்ளேன். இது தமிழர் பண்பு என்றும்கூட வைத்துக்கொள்ளலாம்.

ஒரு புதிய இயக்கம், ஒரு புதிய அரசியல் இயக்கம், ஒரு புதிய பரிமாணத்தோடு இயங்கக்கூடிய வகையில்தான் நமது இயக்கத்தை தொடங்க வேண்டும்; எல்லோரும் சேர்ந்து, இணைந்து இதை ஆரம்பிக்க வேண்டும் என்பது எனது பெரிய ஆசை.

எனது அரசியல் பாதை எளிதானது அல்ல. வளைந்து, நெளிந்து நான் இங்கு வந்திருக்கிறேன். ஒரு கிராமத்தில் பிறந்து, ஒரு விவசாய குடும்பத்தில் இருந்து வந்தவன் நான். இதுபோன்ற எளிய பின்னணி கொண்ட மனிதர்கள் அரசியலுக்கு வருவதே அரிது. ஏனெனில், நாம் ஒதுங்கிக் கொள்வோம்; வர மாட்டோம்.

என்னுடைய பாதையும்கூட 2009ல் விஜயகாந்தின் தேமுதிகவில் மூன்று மாத காலம் இருந்து பயிற்சி பெற்று, பின்னர் 10 ஆண்டு காலம் கழித்து பாஜகவில் இணைந்து அங்கு 6 ஆண்டு காலம் பணியாற்றிய நிலையில், தற்போது தனித்துவமான முறையில் நம்முடைய இயக்கத்தை மக்கள் முன் வைக்க வேண்டும் என்பதற்காக நான் உங்கள் முன் நிற்கிறேன்.

நான் காவல்துறை பதவியை விட்டு விலகிய பிறகு எனக்கும் நடிகர் ரஜினிகாந்துக்கும் இடையே நட்பு ஏற்பட்டது. நான்



முன்பாக இருந்தன. ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவது தமிழ்நாட்டுக்கு நல்லது. ஆனால், கோவிட் பெருந்தொற்று காலமாக இருந்ததால் அவர் அரசியலுக்கு வராமல் இருப்பது அவருக்கு நல்லது. நான் பாஜகவில் இணைவதாக பி.எல். சந்தோஷ் அவர்களிடம் வாக்குறுதி கொடுத்திருந்தேன். அதனால் அதை மீறக்கூடாது என நான் கருதினேன்.

இதனால், என்னை மன்னித்துவிடுங்கள்; என்னால் வர முடியாது என்று ரஜினிகாந்திடம் கூறிவிட்டு, மறுநாள் பாஜகவில் இணைந்தேன். பிறகு நேரிலும் சந்தித்து மன்னிப்பு கோரினேன். அவரும் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டு தனது முடிவை அவர் எடுத்தார். சில யூகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காகவே இதைச் சொல்கிறேன். வேறு காரணம் இல்லை.

பாஜகவில் நான் இருந்தபோது பல தலைவர்களும் முழு ஒத்துழைப்பு அளித்தார்கள். உள்ளாட்சித் தேர்தலில் பாஜக தனித்துப் போட்டியிட வேண்டும் என்று அப்போது முடிவெடுத்தோம். அதேபோல், மக்களவைத் தேர்தலிலும் தனித்துப் போட்டியிட வேண்டும் என்று முடிவெடுத்து அவ்வாறே போட்டியிட்டோம். எனக்கும் இன்னொரு கட்சிக்குமான தனிப்பட்ட பிரச்சினை அல்ல அது. பாஜக தமிழர் அடையாளத்தோடு இருக்க வேண்டும் என்பதற்காகவே அப்படி ஒரு நிலைப்பாட்டை நாங்கள் எடுத்தோம்.

பிரதமர் மோடி மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கக்கூடிய மனிதன் நான். இந்த நாட்டை பாதுகாத்துக் கொண்டிருக்கக்கூடிய மனிதர் அவர். ஆனால், பாஜகவில் எனக்கு சின்ன சின்ன பிரச்சினைகள் இருந்துகொண்டே இருந்தன. இது குறித்து கடந்த 18 மாதங்களாக நான் பாஜக தலைவர்களிடம் சொல்லிக்கொண்டே வந்துள்ளேன்.

பாஜகவில் இருந்து நான் விலக உள்ளேன் என்பதை கடந்த டிசம்பர் 4ம் தேதியே நான் கூறினேன். இப்போதே உங்களை தயார்படுத்த விரும்புகிறேன் என்பதையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என முடிவெடுக்க விரும்பவில்லை என்றும் அவர்களிடம் கூறினேன். அப்போது தேர்தல் பணியை முடித்துவிட்டு செல்லுமாறு சொன்னார்கள். உண்மைத் தொண்டனாக அதை ஏற்று தேர்தல் பணியை முடித்துவிட்டு மே மாதம் இறுதிவரை நான் எனது பணியை செதுவிட்டுத்தான் வெளியே வந்துள்ளேன்.

அடுத்ததாக, ஆனந்தமாக, அன்போடு தமிழகத்தில் நாம் ஒரு அரசியல் இயக்கத்தை தொடங்க இருக்கிறோம். இது அரசியல் இயக்கமா கட்சியா என்றால், அடுத்து தமிழகத்தில் நடைபெற இருக்கிற பொதுத் தேர்தலில் நமது கட்சி போட்டியிடும். அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. அதற்கு நாம் நிறைய தயாரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். நிறைய தலைவர்களை உருவாக்க வேண்டும். நிறைய நிர்வாகிகளை, தன்னார்வர்களை தயார்படுத்த வேண்டும். அதற்கான திறன்களை நாம் அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இதற்கு கொஞ்சம் நேரம் ஆகும். நாம் ஒரு இயக்கமாக ஆரம்பித்து நிறைய மனிதர்களை உள்ளே கொண்டு வந்து அவர்களுக்கு அரசியலை சொல்லிக் கொடுத்து, எல்லா தரப்பு மனிதர்களையும் உள்ளே கொண்டு வர வேண்டும்.

நான் பாஜக தலைவராக பொறுப்பேற்ற பிறகு முதலில் யாரிடம் சென்று ஆசிர்வாதம் வாங்கினேன் என்றால் சமீபத்தில் மறைந்த நல்லக்கண்ணு அய்யா அவர்களிடம்தான். மண் சார்ந்த அரசியலை முன்னெடுக்க வேண்டும், நல்ல மனிதர்களை உள்ளே கொண்டு வர வேண்டும். எல்லா மனிதர்களையும் உள்ளடக்கிய அரசியலை நாம் முன்னிறுத்த வேண்டும். நிறைய தொழில்நுட்ப வல்லுநர்கள் இதில் இணைய வேண்டும்.

உலக அளவிலான பல தொழில்நுட்ப நிறுவனங்களில் உயர் பதவிகளில் நமது தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் நாம் தமிழகத்துக்கு அழைத்து வர வேண்டும். தமிழத்தின் வளர்ச்சிக்கு எல்லோரையும் நாம் பயன்படுத்த வேண்டும். வளர்ந்த பாரதத்தில் முதன்மை மாநிலமாக தமிழகத்தை கொண்டு வந்து நிறுத்த வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதற்கேற்ப அரசியல் இலக்கணம், அரசியல் மொழி என அனைத்தையும் நாம் மாற்ற வேண்டும்.

தமிழகத்துக்கு இன்றைக்கு ஒரு அரசியல் கட்சி வேண்டுமா என்று கேட்டால், நிச்சயமாக வேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. நாம் ஒரு பொருளை வாங்குவதாக இருந்தாலும் அதன் தரத்தைப் பார்த்துதான் வாங்குகிறோம். அதேபோல், நமது இயக்கம் கட்சியாக மாறும்போது மக்கள் அதன் தரத்தைப் பார்ப்பார்கள். நாம் எல்லோரும் பொதுமக்களில் இருந்து வரக்கூடிய தலைவர்களாகத்தான் இருப்போம். தனி நபரை துதிபாடும் அரசியல் இருக்காது.

மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அரசியலை நாம் முன்னெடுக்க வேண்டும். தூய்மையான அரசியல், தூய்மையான நிர்வாகம் என்பது அதற்கான திறன்படைத்த தலைவர்களால்தான் சாத்தியம். அதற்கேற்ப உள்ளாட்சிப் பிரதிநிதிகளில் இருந்து அனைத்து மட்டங்களிலும் அத்தகைய தலைவர்களை நாம் உருவாக்க வேண்டும். இந்த கட்சியில் எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்கும் வகையில் பதவிக்காலம் நிர்ணயம் செய்யப்படும். எத்தனை முறை எம்எல்ஏவாக இருக்கலாம், எத்தனைமுறை எம்பியாக இருக்கலாம் என்பது எல்லோருக்கும் பொதுவானதாக இருக்கும். எனக்கும் இது பொருந்தும். நிரந்தர எம்எல்ஏ, நிரந்தர எம்பி என்பதை நாம் உடைக்கப் போகிறோம்.

இதற்காக www.wetheleader.org என்ற இணைய தளம் செயல்படும். நமது இயக்கத்தில் இதன்மூலம் இணைய முடியும். கோவையில் ஏபிஜே அப்துல் கலாம் அய்யா பெயரில் Centre for Ethics and Politics எனும் அமைப்பை உருவாக்க இருக்கிறோம். இதன்மூலம், பயிற்சிகள் அளிக்கப்படும். நாம் மாறினால் மாற்றம் தானாக வரும். எனவேதான் இந்த இயக்கத்தின் கொள்கையே மாறுவோம்; மாற்றுவோம்.

சமூக வலைதளத்தில் எனது ஆதரவாளரகள் யாராவது யாரையாவது காயப்படுத்தி இருந்தால் அதற்காக நான் மன்னிப்பை கேட்டுக்கொள்கிறேன். இளைஞர்கள் மாற்றம் வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நியாயம் செய்ய வேண்டும். அதேநேரத்தில், வயதானவர்கள் தங்கள் காலத்தை மகிழ்ச்சியோடு கழிக்க தேவையான மாற்றங்களை நாம் செய்ய வேண்டும்.

பிரதமர் மோடி நமது பிரதமர். அதில் ஒரு கம்பீரம் இருக்கிறது. அதேநேரத்தில், திமுக, அதிமுக, தவெக, பாமக, நாம் தமிழர், தேமுதிக உள்ளிட்ட கட்சிகளை எப்படி பார்ப்போனோ அதேபோலத்தான் பாஜகவையும் நான் பார்ப்பேன். யாருக்கும் நாம் போட்டி கிடையாது. யாரையும் எதிர்க்க வேண்டும் என்பதற்காக எதிர்க்கப் போவது கிடையாது. தரம் பார்த்து மக்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நாம் மக்கள் முன் நிற்கப்போகிறோம்.

நாகரிக அரசியலை முன்னெடுப்போம். நாம் எல்லோரும் சேர்ந்து தமிழகத்துக்காக ஒரு புரட்சியை, மாற்றத்தை ஏற்படுத்துவோம். பாரதத்தில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றுவது மட்டும்தான் நமது குறிக்கோள். இதற்காக நாம் நமது வாழ்வை அர்ப்பணிப்போம். மாறுவோம்; மாற்றுவோம்” என்று அண்ணாமலை கூறினார்.



## உதகை சாந்தி விஜய் தொடக்கப்பள்ளியில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் காலை உணவு திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

உதகை, ஜூன்.6-

நீலகிரி மாவட்டம் உதகை சாந்தி விஜய் தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்படும் காலை உணவினை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:கோடை விடுமுறை நிறைவடைந்ததையொட்டி இன்றைய தினம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளும் திறக்கப்பட்டுள்ளன. இதில் 316 கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் 48 நகர்ப்புறங்களில் உள்ள பள்ளிகள் என மொத்தம் 364 பள்ளிகளில் பயிலும் 11,702 மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. இதுகுறித்து, நேற்றைய தினம்துறை அலுவலர்களுடனான கூட்டம் மற்றும் அனைத்து முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு, இன்றைய தினம் காலை உணவு வழங்கும் பணியானது தொடங்கி வைக்கப்பட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது மாவட்டஆட்சித்தலைவர் தெரிவித்தார்.இந்நிகழ்வில் உதகை நகராட்சி ஆணையாளர் நித்யா, நகர் நல அலுவலர் .சிபி, உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) ராஜா உட்பட பலர் உடனிருந்தனர்.






## தாம்பரம் மாநகர திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா மற்றும் நடைபெற்றது

தாம்பரம், ஜூன்.6-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா மற்றும் நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தாம்பரம் தொகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழகத் தேர்தல் பணி குழு செயலாளர் கம்பம் பெ.செல்வேந்திரன், கழக நாடாளுமன்ற குழுத் தலைவர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, காஞ்சி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி, மாநகர நிர்வாகிகள் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், இரா.நரேஷ்கண்ணா, மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை பகுதி கழக செயலாளர்கள் எஸ்.சேகர், இரா.சுரேஷ்,, த.ஜெயகுமார்,, ஏ.கே. கருணாகரன் மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் ஆர்.எஸ். கிருத்திகா தேவி, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு.டி.பிரகாஷ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு, தலைமை கழக பேச்சாளர்கள் கி.வேல்மணி, எஸ் ஜி.கருணாகர பாண்டியன், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட மாநகர பிரதி நிதிகள், பகுதி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்




■ சென்னை, அமைந்தகரை , அம்பா ஸ்கைஒன் மாலில், முதல் முறையாக,முதல் தளத்தில் 8000 சதுர அடி பரப்பில், வசந்த் – கோ, கோலாக்கலமாக 147 வது கிளை திறப்பு விழா நடைபெற்றது. இயக்குனர் வினோத் வசந்தகுமார் திறந்து வைத்தார். மேலும் அம்பா ஸ்கைஒன் மேனேஜிங் பார்ட்னர் பழனியப்பன் கலந்துகொண்டு சிறப்பித்தார். விழாவின் போது கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. சுற்றுவட்டார அனைத்து பொதுமக்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

## பந்தலூர் நூலகத்தில்இலவச மருத்துவ மற்றும் கண் பரிசோதனை முகாம்




பந்தலூர், ஜூன்.6-

நீலகிரி மாவட்டம் பந்தலூர் முழுநேர கிளை நூலகத்தில் இலவச பொது மருத்துவம் மற்றும் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், இந்திய செஞ் சிலுவை சங்க நடமாடும் மருத்துவக் குழு, பந்தலூர் முழுநேர கிளை நூலகம், அம்பேத்கர் மக்கள் இயக்கம் மற்றும் மகாத்மா காந்தி பொது சேவை மையம் ஆகியவை இணைந்து நடத்திய முகாமிற்கு பந்தலூர் கிளை நூலகர் நித்தியகல்யாணி தலைமை தாங்கினார். கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம், செஞ் சிலுவை சங்க கல்லூரி ஒருங்கிணைப்பாளர் செல்வகுமார், பள்ளி ஒருங்கிணைப்பாளர் ஸ்டீவன்சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சிலுவை சங்க மாவட்ட செயலாளர் மோரிஸ் சாந்தகுருஷ் முகாமை தொடங்கி வைத்தார். மருத்துவர் ஜேன் மார்டினெஸ் தலைமையிலான மருத்துவக் குழுவில் மருந்தாளுநர் நவீன், செவிலியர் கிரிஜா, நிர்வாக அலுவலர் லாய்சன் உள்ளிட்டோர் பங்கேற்று ரத்த அழுத்தம், ரத்த சர்க்கரை பரிசோதனை மற்றும் பொது மருத்துவ சிகிச்சைகளை வழங்கினர். தேவையானவர்களுக்கு இலவச மருந்துகளும் வழங்கப்பட்டன. அதேபோல் கண் மருத்துவர் பிரவின், கண் தொழில்நுட்ப உதவியாளர்கள் ராபர்ட் மற்றும் பாக்யா ஆகியோர் கிட்டப்பார்வை, தூரப்பார்வை மற்றும் பிற கண் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டனர்.முகாமில் 150க்கும் மேற்பட்டோர் மருத்துவ பரிசோதனை பெற்றனர். 15 பேர் கண்புரை அறுவை சிகிச்சைக்கும், 10 பேர் கண் அழுத்தம் (Glaucoma) சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டனர். 85 பேருக்கு கிட்ட பார்வைக்கான இலவச கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன, இலவச மருந்துகள் வழங்கப்பட்டன. முகாமிற்கான ஏற்பாடுகளை அம் பேத்கர் மக்கள் இயக்க நிர்வாகிகள் இந்திரஜித், முருகவேல், மகாத்மா காந்தி பொது சேவை மைய தலைவர் நௌஸாத், நூலக உதவியாளர் சரஸ்வதி, போட்டித்தேர்வு மாணவர்கள் மற்றும் பலர் சிறப்பாக செய்திருந்தனர்.



## முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு முதியோர்களுக்கு சிக்கன் பிரியாணி வழங்கினார்கள்

தாம்பரம், ஜூன்.6-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த சேலையூரில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டலக் குழுத் தலைவர் எஸ். இந்திரன் அவர்களின் ஏற்பாட்டில் சமூக நலப்பணி நிகழ்ச்சி நடைபெற்றது.கேம்ப் ரோடு அகரம் தென் சாலையில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தில் வசித்து வரும் முதியோர்களுக்கு சிறப்பு மதிய உணவாக சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் முதியோர்களின் நலன் மற்றும் தேவைகளை அறிந்து அவர்களுடன் கலந்துரையாடிய எஸ். இந்திரன் அவர்கள், கலைஞர் கருணாநிதி அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஏழை, எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டதை நினைவு கூர்ந்தார். மேலும், கலைஞரின் பிறந்தநாளை வெறும் விழாவாக மட்டுமின்றி, சமூக அக்கறையை வெளிப்படுத்தும் நாளாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக முதியோர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரிவித்தார்.இந்த நிகழ்வில் உள்ளூர் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் முதியோர் இல்ல நிர்வாகத்தினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முதியோர்களுக்கு அன்புடன் உணவு பரிமாறப்பட்டதுடன், அவர்களிடம் நலம் விசாரித்து வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டன.இந்த மனிதநேயச் செயலை முதியோர் இல்லத்தில் உள்ள மூத்த குடிமக்கள் பாராட்டியதுடன், ஏற்பாட்டாளர்களுக்கு தங்களது நன்றியையும் தெரிவித்தனர்.

## வெலிங்டன் கண்டோன்மெண்ட் பாளைய நிர்வாகம் சார்பில் உலக சுற்றுச்சூழல் தினம் 2026 விழிப்புணர்வு பேரணி







வெலிங்டன், ஜூன்.6-

குன்னூர் அருகேஉள்ளே வெலிங்டன் கண்டோண்மென்ட் நிர்வாகம் சார்பில் உலக சுற்றுச் சூழல் தினத்தினை முன்னிட்டு பிளாஸ்டிக் மாசுபாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து, வெலிங்டன் கண்டோன்மென்ட் வாரியம் சார்பில், பிளாஸ்டிக் ஒழிப்பு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இவற்றை குறித்து மக்கள் கூடும் இறைவழிபாடு பகுதிகள், கோயில்,தேவாலயங்கள் மசூதி, சமுதாயக்கூடம், கடைவீதி, சுற்றுலாதளம், பள்ளி,கல்லூரி, பேருந்து நிறுத்தம், போன்ற பகுதிகளில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து வெலிங்டன் கண்டோன்மென்ட் முதன்மை நிர்வாக அதிகாரி துக்னி கிந்தியா ஆணைக்கிணங்க கண்டோன்மென்ட் பகுதியில் உள்ள வெலிங்டன் உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர், வெலிங்டன் ராணுவ வீரர்கள், வெலிங்டன் பாளைய நிர்வாக அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு உலக சுற்றுச்சூழல் பாதுகாக்க வலியுறுத்தி பள்ளியில் இருந்து பிளாஸ்டிக் ஒழிப்போம் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பதாதைகளை ஏந்தி பேரணியாக சென்று எக்கோ பார்க் பகுதியில் பள்ளி மாணவ மாணவிகள் பிளாஸ்டிக் விழிப்புணர்வு சுற்றுச்சூழலை எவ்வாறு பாதுகாப்பது என்பதைவிழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது மற்றும் அப்பகுதியில் உள்ள கடைகளுக்கு கண்டோண்மென்ட் சுகாதார துறை அதிகாரிகள் பிளாஸ்டிக் விழிப்புணர்வு மற்றும் சுற்றுபுற பகுதிகளை தூய்மையாக வைத்து கொள்வது குறித்து விழிப்புணர்வு மேற்கொண்டனர்.இந்த விழிப்புணர்வு பேரணி மற்றும் நிகழ்ச்சியில் வெலிங்டன் கண்டோண்மென்ட் பொறியாளர் சுரேஷ் வெலிங்டன் கண்டோண்மென்ட் அலுவலக சுகாதார கண்காணிப்பாளர் ராதாகிருஷ்ணன், சுகாதார ஆய்வாளர்கள் பழனிசாமி,பூரணி, மற்றும் கண்டோன்மென்ட் தூய்மை பணியாளர்கள் ஊழியர்கள் ஆசிரியர்கள் பள்ளி மாணவ மாணவியர்கள் உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



■ சென்னை ஜாபர்கான்பேட்டை, சோழன் தெரு பாரி நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ இரத்தின கணபதி ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. மங்களகரமான பராபவ வருஷம் வைகாசி மாதம் சதுர்த்தி திதி, உத்திராட நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் சிம்ம லக்கனத்தில் ஸ்ரீ இரத்தின கணபதி மற்றும் பரிவார தெய்வங்களான வள்ளி தெய்வ சேனா சமேத பாலசுப்பிரமணியர்துர்க்கை அம்மன், மஹாலட்சுமி, ஐயப்பன், வீரபக்த ஆஞ்சநேயர், விசாலாட்சி அம்பிகை, சமேத, காசி விசுவநாதர், கால பைரவர், தட்சிணாமூர்த்தி, நவக்கிரஹம், சீரடி பாபா ஏனைய ஆலய தெய்வங்கள் அனைத்துக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. சுவாமி அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது. சுவாமி தரிசனம் செய்த அனைத்து பக்த கோடிகளுக்கும் , ஆலயம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலய தலைவர் பாரி நகர் சசி மற்றும் ரஞ்சனி பாலசுப்பிரமணியன் மேலும் ஆலய விழா குழுவினர் சிறப்பாக கும்பாபிஷேகத்தை நடத்தினர்.





## தேனியில் நவீன CCTV கேமரா குற்றச் சம்பவ கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறை

தேனி, ஜூன்.6-

தேனி மாவட்ட காவல் அலுவலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நவீன CCTV கேமரா குற்றச் சம்பவ கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறையை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B. சினேஹா ப்ரியா,திறந்து வைத்தார். தனியார் நிறுவனத்துடன் இணைந்து மாவட்ட காவல்துறை தேனி மாவட்டம் முழுவதும் மொத்தம் 450 CCTV கேமராக்கள் பொருத்தப்பட உள்ளது, அதில் முதற்கட்டமாக தற்போது 60 CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டு 24ஜ்7 நேரமும் கண்காணிக்கப்பட உள்ளது.இக்கேமராக்கள் மூலம் முக்கிய சாலைகள், மக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் முக்கிய சந்திப்புகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.இந்த நவீன கண்காணிப்பு அமைப்பு மூலம் குற்றத் தடுப்பு, மற்றும் குற்றவாளிகளை கண்டறிய,சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, பெண்கள் பாதுகாப்பு, போக்குவரத்து சீர் செய்ய உள்ளிட்ட காவல்துறையின் பணிகள் மேலும் திறம்பட செயல்படுத்தப்படுவதுடன், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் முக்கிய பங்காற்றும்.



# ஆற்காடு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் விழா!

## எம்எல்ஏ பங்கேற்ப்பு

ராணிப்பேட்டை, ஜூன்.6-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஏபிஜே அப்துல் கலாம் ஃபியூச்சர் இந்தியா டிரஸ்ட் சார்பில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியை பரிமளா தலைமை தாங்கினார். உதவி தலைமை ஆசிரியை காயத்ரி அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் எஸ். எம். சுகுமார் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றி பேசினார்.. இதில் அஇஅதிமுக நகரச் செயலாளர் ஜிம். சங்கர், வணிகர் சங்க பேரமைப்பின் ராணிப்பேட்டை மாவட்ட தலைவர் பொன். கு. சரவணன், வி டி பி சூப்பர் மார்க்கெட் உரிமையாளர் தங்கபாண்டியன், நகர மன்ற உறுப்பினர்கள் பூவரசு, உதயகுமார், ஏபிஜே அப்துல் கலாம் டிரஸ்ட் தலைவர் கோபிநாத், இமைகள் அறக்கட்டளை தலைவர் சையத்பாரூக் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் சுமார் 300க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் மாணவிகளுக்கு வழங்கப்பட்டது. இதில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வண்டலூரில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா ஊனமுற்றோர் இல்லத்தில் அறுசுவை உணவு வழங்கினர்

வண்டலூர், ஜூன்.6-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட வண்டலூர் ஊராட்சியில் திமுக சார்பில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் 103வது பிறந்தநாள் விழா காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய மாணவர் அணி துணை அமைப்பாளர் வண்டலூர் எம்.வி.ராஜ் என்கின்ற பிரகதீஷ் அவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக காட்டாங்குளத்தூர் வடக்கு





ஒன்றிய கழகச் செயலாளர் எம்.டி.லோகநாதன், காட்டாங்குளத்தூர் வடக்கு இளைஞர் அணி அமைப்பாளரும் ஒன்றிய குழு துணை தலைவருமான ஏவிஎம்.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டு வண்டலூர் வில்லியம்ஸ் ஊனமுற்றோர் பள்ளியில் இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கி பிறந்தநாள் விழா வெகு விமர்சியாக கொண்டாடபட்டது இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர் டி.குணா, வண்டலூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கவிதா சத்திய நாராயணன், மாவட்ட விவசாய துணை அமைப்பாளர் எஸ்.சத்யநாராயணன், காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர், சி.கார்த்திகேயன், வண்டலூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் எம்.வேல்முருகன் ஈ.வாசுதேவன், ஆர்.கார்த்திகேயன், எம்.எஸ்.சதீஷ், மற்றும் கழக நிர்வாகிகள் இளைஞர் அணி நிர்வாகிகள் மாணவரணி மகளிர் அணி உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ திருப்பத்தூர் மாவட்டத்தில் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தி, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே, இ.கா.ப., தலைமையில் திருப்பத்தூர் நகரப் பகுதியில் நடைபயண ரோந்து (Foot Patrol) பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் பகுதிகளில் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர்கள் தலைமையில் ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் இணைந்து பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், முக்கிய சாலைகள் மற்றும் வர்த்தகப் பகுதிகளில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். இந்த ரோந்து பணியின் போது பொதுமக்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன் சமூக விரோத செயல்கள் குற்றச் சம்பவங்கள் மற்றும் சட்டம்ஒழுங்கு பிரச்சினைகளைத் தடுக்கும் வகையில் காவல்துறையினர் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டனர்.



■ சென்னை குன்றத்தூர், சேக்கிழார் நகரில் அமைந்துள்ள அருள்மிகு பூபாள விநாயகர் ஆலய ஜீர்னோத்தாரன புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. தெய்வப்புலவர் ஸ்ரீ சேக்கிழார் பெருமானால் பிரதிஷ்டை செய்ய பெற்ற, ஸ்ரீ காமாட்சி அம்மை உடனுறை ஸ்ரீ நாகேஸ்வர சுவாமி திருக்கோவிலில் அருள் பாலித்து வரும் ஸ்ரீ பூபாள விநாயகருக்கு முன்மண்டபம், நூதன அம்பாள் ஆலயம் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும், பராபவ வருடம் வைகாசி மாதம் உத்திராட நட்சத்திரத்தில் சங்கடஹர சதுர்த்தியில், சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் மிதுன லக்னத்தில் மகா கும்பாபிஷேக விழா ஆலய நிர்வாகிகளால் சிறப்பாக நடைபெற்றது. மேலும் ஆலய நிர்வாகிகள் மற்றும் சேக்கிழார் நகர், காமராஜர் வாழ் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




# தொளவேடு கிராமத்தில் தவெக எல்லாபுரம் வடக்கு ஒன்றியம் சார்பில் இலவச மருத்துவ முகாம்

திருவள்ளூர், ஜூன்.6-

திருவள்ளூர் மாவட்டம் தண்டலம் அருகே தொளவேடு கிராமத்தில் த.வெ.க. எல்லாபுரம் வடக்கு ஒன்றியம் பிரமுகர் வழக்கறிஞர் ராமு பிறந்த நாளை முன்னிட்டு Dr.அகர்வால் மருத்துவமனை மற்றும் சார்லஸ் மல்டி ஸ்பேஷாலிடி கிளினிக் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் மற்றும் நலதிட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய செயலாளர் ரி.உதயகுமார் ஒன்றிய செயற்குழு உறுப்பினர் ஸி.விஜியன் இணைசெயலாளர் பிரதாப் பொருலாளர் அஸ்லாம் இளைஞரணி அமைப்பாளர் மகேஷ் மாவட்ட வழக்கறிஞர் அணிஇணை ஒருங்கிணைப்பாளர்வழக்கறிஞர் மாகேஷ் ஒ.துணை செய. ஸி.கௌதமிராமு கார்த்திக், செயற்குழு உறுப்பினர் செல்வி, கண்மணி, சதீஷ், , விக்னேஷ், அரவிந்த் அன்பு, பென்னி,ஒருங்கிணைப்பில் நடைபெற்றது இம் முகாமி ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்று சென்றனர்



# பெரியகுளம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடை ரோந்து மூலம் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நேரடி ஆய்வு

பெரியகுளம், ஜூன்.6-

தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B. சினேஹா ப்ரியா, பெரியகுளம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடை ரோந்து (Foot Patrol) மூலம் நேரடி ஆய்வு மேற்கொண்டு. பொதுமக்கள், வியாபாரிகள் மற்றும் வணிக நிறுவன உரிமையாளர்களை சந்தித்து, காவல்துறையினரின் போக்குவரத்து ஒழுங்குமுறை சேவைகள், பொதுமக்களுக்கு வழங்கப்படும் காவல் சேவைகளின் தரம் மற்றும் அப்பகுதியில் ரவுடிகள் மற்றும் சமூக விரோதிகளின் நடமாட்டம் தொடர்பாக கருத்துக்களை கேட்டறிந்தார்.மேலும், தேனி மாவட்டம் முழுவதும் அந்தந்த காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் நடை ரோந்து மேற்கொண்டு வருகின்றனர், காவல்துறையினரின் இத்தகைய நடை ரோந்து பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு பெற்று வருகிறது.



■ திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குரும்பேரி ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் நாற்றங்கால் பண்ணை வளர்த்தல் பணியினை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (04.06.2026) அன்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் டாக்டர்.உமாமகேஸ்வரி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கருணாநிதி, சதானந்தம், ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் கார்த்திகேயன், மேற்பார்வையாளர் தேவி பாலா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்



# இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மத போதகர்கள் முன்னிலையில் தமிழக வெற்றிக்கழக திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா

திருப்பத்தூர், ஜூன்.6-

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் தூய நெஞ்சக் கல்லூரி எதிரே அமைந்துள்ள சக்தி நகர் பகுதியில் தமிழக வெற்றிக்கழகத்தின் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திருப்பதி தலைமையிலும் மாவட்ட செயலாளர் முனிசாமி முன்னிலையில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. மேலும் எம்மதமும் சம்மதம் என்ற உயரிய கோட்பாட்டை வலியுறுத்தும் வகையில், இந்து, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மதங்களைச் சேர்ந்த மூன்று மத போதகர்கள் இணைந்து ரிப்பன் வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தனர். இந்த நிகழ்வு மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. இந்த விழாவில் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு வாழ்த்துகளை தெரிவித்தனர். குறிப்பாக விடுதலை சிறுத்தைகள் கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

மேலும், மாவட்ட செயலாளர் முனிசாமி, ஒன்றிய செயலாளர் சாமிநாதன், நகர செயலாளர்கள், கிளை செயலாளர்கள், ஊராட்சி செயலாளர்கள் மற்றும் பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். நிகழ்ச்சியில் பேசிய நிர்வாகிகள், மக்கள் நலன் மற்றும் சமூக ஒற்றுமையை முன்னிறுத்தி தொடர்ந்து சேவைப் பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தனர்.

# தேனி மாவட்டம்கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளதை முன்னிட்டு, மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகளை வழங்கி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

லட்சுமிபுரம், ஜூன்.6-

கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளதை முன்னிட்டு, தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், இலட்சுமிபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இலட்சுமிபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், வழங்கினார். தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, தமிழ்நாட்டில் இன்று பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளது. இலட்சுமிபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட காலை




உணவின் தரம் மற்றும் மாணவர்களுக்கு போதுமான அளவில் உணவு வழங்கப்படுகிறதா என்பன குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், உணவு தயாரிக்கும் சமையலறை, குடிநீர் வசதி, உணவுப் பொருட்களின் இருப்பு போன்றவற்றை பார்வையிட்டார். தொடர்ந்து, பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட இலட்சுமிபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 8ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகளை வழங்கி கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்று மாணவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார். மேலும், பள்ளி வளாகம், வகுப்பறைகள் மற்றும் கழிவறை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளையும் ஆய்வு செய்து தூய்மையாக பராமரிக்கப்பட வேண்டும் என்றும், மாணவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் உறுதி செய்யப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து, இலட்சுமிபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பசுமைப் பள்ளி (Green School) திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை நடவு செய்தார். இவ்வாய்வில், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சந்திரா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், வட்டாட்சியர் (பெரியகுளம்) மருதுபாண்டி உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழா நடைபெற்றது. இதில் மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.செல்வி மற்றும் மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் கே.செந்தூர் பாண்டியன் கலந்துகொண்டு, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவனுக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர். நிகழ்ச்சியில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலரும் பங்கேற்றனர்.



# கைலாஷ் நினைவு நாள் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை முகாம்

மாதவரம், ஜூன்.6-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி பவானிநகரில் உள்ள ஸ்ரீ பவானியம்மன் ஆலய அன்னதான மண்டபத்தில் கமிலாஷ் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கைலாஷ் நினைவு அறக்கட்டளை,தனியார் கிளினிக் மற்றும் டாக்டர் அர்வால் கண் மருத்துவமனை சார்பில் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை முகாம் கைலாஷ் நினைவு அறக்கட்டளை நிறுவனர் கிருஷ்ணன் ஏற்பாடு மற்றும் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கைலாஷ் திருஉருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் ஏழை தாய்மார்களுக்கு புத்தாடை போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதனைத்தொடர்ந்து பொதுமக்களுக்கு இலவச மருத்துவ முகாமை துவக்கி வைத்தனர். மேலும் இந்த முகாமில் டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை மருத்துவ குழுவினர்கள் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இலவசமாக இரத்த அழுத்தம், பொது உடல் நலம், பிஎம்ஐ, பல் உள்ளிட்ட பரிசோதனைகள் செய்யப்பட்டு பின்னர் மருந்து மாத்திரைகளை வழங்கினர். இதில் மாரியப்பன், சேக்முகம்மதுஅலி, கணேசன், சீனிவாசன், வாசு,சேகர், அபுபக்கர், கண்ணப்பன் ,செல்வகுமார், ஆனந்த், சேகர், பிஸ்மில்லா,சுரேஷ், ஜெஸ்டின், அருள், சுரேஷ்குமார், அந்துவான்சத்தியநேசன், ராஜவேல், விக்னேஷ், மணி, அசோக்குமார், பாஸ்கர், பாலாஜி, திவாகர், பால்சாமி, நுதர்சணன், மோகன், முருகன்,மகேஷ்வரி, மீனா, தேவி, தனலட்சுமி உள்ளிட்ட பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.



# தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம்

மாதவரம், ஜூன்.6-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் அமைந்துள்ள சமுதாய நலகூடத்தில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராமசபை கூட்டம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி செயலர் உல்லாசகுமார் தலைமை நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பற்றாளர் சுலோச்சனா, கால்நடை மருத்துவர் ஆர்த்தி, கிராம நிர்வாக அலுவலர் ரமேஷ், பயிற்றுனர் வேல்விழி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் தூய்மை பாரத இயக்கம், உலக சுற்றுச்சூழல் தின கொண்டாட்டம், தூய்மை கிராம் மற்றும் பாதுகாப்பான குடிநீர் பிரச்சாரம் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் மகளிர் சுய உதவி குழுக்கள், சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர். முடிவில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.



■ மதுரை மாவட்டம், அரிட்டாபட்டியில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வரும் வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ப. ஆகாஷ், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.மற்றும்அரிட்டாபட்டியில் கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுமார் 2200 ஆண்டுகள் பழமையான சமணர் படுக்கைகள் மற்றும் தமிழ் பிராமி கல்வெட்டுகளையும், கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுமார் 1300 ஆண்டுகள் பழமையான சிவன் கோவில் குடைவரையையும் பார்வையிட்டு, அவற்றின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

# உலக சுற்றுச்சூழல் தினம்: மாணவர்கள் மரக்கன்றுகள் நட்டு விழிப்புணர்வு ஊர்வலம்

கிருஷ்ணகிரி ஜூன்.6-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்குட்பட்ட அரசு உயர்நிலைப்பள்ளி, நாட்டாண்மை கொட்டாயில் உலக சுற்றுச்சூழல் தினம் நேற்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி மணிமேகலை தலைமை தாங்கினார். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் மாணவர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள்



வழங்கப்பட்டன.தேசிய பசுமைப் படை ஒருங்கிணைப்பாளர் ஜெயகாந்தி, சுற்றுச்சூழல் பா துகாப்பின் அவசியம், மரங்களின் முக்கியத்துவம் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார் .புதியதாக பள்ளியில் சேர்ந்த ஆறாம் வகுப்பு மாணவர்கள் மரக்கன்றுகளை கொண்டு வந்து பள்ளி வளாகத்தில் நட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான தங்களது பங்களிப்பை வெளிப்படுத்தினர். மேலும், அனைவரும் நெகிழிப் பொருட்களைத் தவிர்த்து மீண்டும் மஞ்சப்பை பயன்பாட்டை ஊக்குவிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் மற்றும் மஞ்சப்பைகளை ஏந்திய மாணவர்கள், விழிப்புணர்வு முழக்கங்களை எழுப்பியவாறு நாட்டாண்மை கொட்டாய், பொன்னியம்மன் கோயில் பகுதி, மொட்டையன் கொட்டாய் உள்ளிட்ட கிராமங்களில் ஊர்வலமாகச் சென்று பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளி ஆசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



# மதுரை நாயக்கர் மஹாலில் புனரமைப்பு பணிகள் தீவிரம்: மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு

மதுரை, ஜூன்.6-

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் ப. ஆகாஷ் மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள மன்னர் திருமலை நாயக்கர் மஹால் வளாகத்தில் நடைபெற்று வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, தரைத்தள கற்கள் அமைத்தல், தள அருங்காட்சியக மேம்பாடு, சிற்ப முற்றம் அமைத்தல், மழைநீர் வடிகால் வசதிகள் ஏற்படுத்துதல், நவீன கழிப்பறைகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளிடம் விரிவாக கேட்டறிந்தார்.மேலும், பாரம்பரிய சிறப்புமிக்க மஹாலின் வரலாற்று மதிப்பை பாதுகாக்கும் வகையில் அனைத்து பணிகளும் உயர்தரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், திட்டமிட்ட



காலக்கெடுவுக்குள் பணிகளை விரைந்து நிறைவு செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார்.

சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு மேம்பட்ட வசதிகளை வழங்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணிகள் நிறைவடைந்தால், மன்னர் திருமலை நாயக்கர் மஹாலின் அழகும் பயன்பாடும் மேலும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 5 திருப்பரங்குன்றம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் துணை ஆணையாளர் ராஜாராம் , மாநகர் நல அலுவலர் மரு.அர்விந்த் ஜோதி , உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



# காவேரிப்பட்டினத்தில் கழிவுநீர் கால்வாய் சீரமைப்பு பணி தொடக்கம்

கிருஷ்ணகிரி, ஜூன்.6-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பேரூராட்சிக்குட்பட்ட தேசி செட்டி தெரு, 14வது வார்டில் குமார் மாவு மில் அருகே கழிவுநீர் கால்வாய் சீரமைக்கும் பணிக்கான பூமி பூஜை நடைபெற்றது. காவேரிப்பட்டினம் பேரூராட்சித் தலைவர் அம்சவேணி செந்தில்குமார் பணிகளை தொடங்கி வைத்தார்.நிகழ்ச்சியில் திமுக மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணைத் தலைவர் செந்தில்குமார், வார்டு கவுன்சிலர்கள் முத்துக்குமார், சின்ன ராஜி, தமிழ்செல்வி சோபன் பாபு, கிளை செயலாளர்கள் சமரசம், பாஸ்கரன், வழக்கறிஞர் பிரிவு மாவட்ட துணைத் தலைவர் ஜான் பால், ஓவியர் தாஸ், சபரி, நடேசன், சிற்றரசன், போஸ்ட் மாஸ்டர் செல்வம் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தவெக நிர்வாகி கார் மோதி தள்ளுவண்டி கடை சேதம்: கடைக்காரர் மீது தாக்குதல்!

காளியூர், ஜூன்.6-

காளியூரைச் சேர்ந்த வள்ளியம்மாள் (50) என்பவர் தள்ளுவண்டி கடை வைத்து நடத்தி வருகிறார். கோபியில் தள்ளுவண்டி கடைக்காரர் மீது தாக்குதல் நடத்தியதாக தவெக நிர்வாகி சசிகுமார் மீது புகார் எழுந்துள்ளது. புகாரின் பேரில் தவெக நிர்வாகி மீது நடவடிக்கை எடுக்காத போலீசார், வள்ளியம்மாளை மிரட்டியதாக புகார். பெரிய கொடிவேரி பேரூர் கழக தவெக செயலாளர் சசிகுமார் கார் மோதி வள்ளியம்மாளின் தள்ளுவண்டி கடை சேதமடைந்துள்ளது




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,
Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161